www.Padasalai.Net www.TrbTnpsc.com

# முதல் இடைப் பருவத் தேர்வு - ஜூலை - 2019

திருநெல்வேலி மாவட்டம்

பத்தாம் வகுப்பு

தமிழ்

நேரம் : 1-30 மணி மதிப்பெண்கள் : 50

## பகுதி - அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க: 1 × 3 = 3**

1. பொருத்தமற்றதைத் தேர்ந்தெடு
   (அ) கனிச்சாறு (ஆ) பள்ளிப்பறவைகள் (இ) தென்மொழி
2. வண்டொடு புக்க மணவாய்த் தென்றல் – என்று கூறும் இலக்கியம்
   (அ) மணிமேகலை (ஆ) சிலப்பதிகாரம் (இ) கம்பராமாயணம்
3. இரட்டுற மொழிதல் அணியின் வேறு பெயர்
   (அ) உவமையணி (ஆ) சிலேடையணி (இ) உருவக அணி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக: 1 × 3 = 3**

4. காய்ந்த இலை .................. என அழைக்கப்படும்.
5. நீடு துயில் நீக்கப்பாடி வந்த நிலா என்று புகழப்பட்டவர் .................. .
6. முல்லை நிலத்தின் சிறு பொழுது .................. .

**III. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு குறுகிய அளவில் விடையளிக்கவும்: 3 × 2 = 6**

7. வசனக்கவிதை – குறிப்பு வரைக.
8. சருகும் சண்டும் ஒன்றா? காரணம் தருக.
9. காற்றைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை?
10. பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள் 4 எழுதுக.
11. இன்னறும் பாப்பத்தே, எண்தொகையே, நற்கணக்கே – இவ்வடிகள் குறித்து நீவிர் அறிவன யாவை?

**IV. ஏதேனும் இரு வினாக்களுக்கு சிறு அளவில் விடை தருக: 2 × 4 = 8**

12. காற்றை எவ்வாறு வீசுமாறு பாரதியார் கேட்டுக்கொள்கிறார்?
13. புளியங்கன்று ஆழமாக நட்டேன் –இது போல இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களை தொடர்களில் அமைக்க.
14. தமிழுக்கும் கடலுக்கும் உள்ள ஒற்றுமையைப் பட்டியலிடுக.

## பகுதி - ஆ

**V. சரியான விடையைத் தேர்வு செய்க: 1 × 3 = 3**

15. பொதுமொழியைத் தேர்ந்தெடு
    (அ) கண் (ஆ) படம் வரைந்தான் (இ) வைகை
16. காலம் கரந்த பெயரெச்சம் .................. ஆகும்.
    (அ) உவமைத் தொகை (ஆ) பண்புத் தொகை (இ) வினைத் தொகை
17. உயிரளபெடை .................. வகைப்படும்.
    (அ) இரண்டு (ஆ) மூன்று (இ) ஐந்து

**VI. கோடிட்ட இடத்தை நிரப்புக: 1 × 3 = 3**

18. தொடுதிரை என்பது .................. தொகைநிலைத்தொடர்.
19. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது .................. .
20. அளபெடை என்ற சொல்லின் பொருள் .................. .

**VII. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு குறுகிய அளவில் விடையளிக்கவும்: 3 × 2 = 6**

21. உயிரளபெடையை விளக்குக.
22. மோர்க்குடம், தாய்தந்தை – எவ்வகைத் தொகைநிலைத் தொடர்கள்?
23. தொழில்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு யாது?
24. கெடுதல், கேடு, தட்டு, நடவாமை – இச்சொற்களின் தொழிற்பெயர்கள் யாவை?

www.Padasalai.Net www.TrbTnpsc.com



VIII. விடையளி: 5

25. அடவி, பழனம் – அகராதி கூறும் பொருள் எழுதுக.

26. நேற்று என்னைப் பார்த்தார். அவர் எனது உறவினர்.
(வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்று)

27. எழுகதிர் – இச்சொல்லில் உள்ள தொகையைக் கண்டறிந்து எழுதுக.

28. விடு, காண் – விகுதிகளை இணைத்து தொழிற்பெயர் உருவாக்குக.

29. புல் .................. , பழம் .................... – கூட்டப்பெயர்களை கண்டு பிடித்து எழுதுக.

30. மொழி பெயர்க்க: 2

If you talk to a man in a language he understand that goes to his head. If you talk to him in his own language that goes to his heart.

IX. ஒரு பக்க அளவில் விடையளி: 6

31. மனோன்மணீயம் சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்திற்கும், பெருஞ்சித்திரனார் தமிழ்த்தாய் வாழ்த்திற்கும் உள்ள ஒற்றுமைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

32. பாரதியார் காற்றை எவ்வாறு வருணிக்கிறார்?

X. அடிபிறழாமல் எழுதுக: 5

'அன்னைமொழியே' எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

திருக்குமார். மு. ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப, வல்லம் 627 809.

★ ★ ★ ★ ★